# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2018 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் : 1**

பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18 ன் கீழ் பாரதிபுரத்தில் குழந்தைகள் நல மையம் கட்டிடம் கட்டுதல் பணிக்கு 04.04.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திரு.P.திருமூர்த்தி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.28% அதிகம் |
| 2. திருவாளர்கள்.D.R.கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு |

(ந.க.எண்: 1060/2017/இ1)

**அலுவலக குறிப்பு :**

1. பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18 ன் கீழ் மேற்படி பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்:1681/2017/அ6 நாள்:13.03.2018இன் படி ரூ.9.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 0.16% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள்.D.R.கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 2**

பல்லடம் நகராட்சி வார்டு எண்:08 திருப்பூர் சாலை அலங்கார் தியேட்டர் முன்பு சுமார் 35 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.50 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: /2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 3</u>**

வார்டு எண் : 04 செந்தோட்டம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு 19.04.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.79% அதிகம் |
| 2. திரு.V.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர், பல்லடம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.36% அதிகம் |

(ந.க.எண்: 117/2017/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. இப்பணிக்கு நகரமன்றம் தனது 25.02.2018 தேதியிட்ட 25 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.30,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி 4.79% விலைவிகிதம் வழங்கிய திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க தனி அலுவலர் முடிவு செய்யலாம்.

**<u>பொருள் : 4</u>**

நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்ஆக்கியில் (Generator) பழுதடைந்துள்ள பேட்டரியை புதிதாக மாற்றும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு :

| | |
|---|---|
| 1. அன்னை பேட்டரி வொர்க்ஸ், பொள்ளாச்சி ரோடு, பல்லடம் | ரூ.12,544/— |
| 2. பவானி ஆட்டோ எலக்ட்ரிக்கல் வொர்க்ஸ், பொள்ளாச்சி ரோடு, பல்லடம் | ரூ.12,900/— |
| 3. விவேகானந்தா பேட்டரீஸ் அன்ட் எலக்ட்ரிக்கல் வொர்க்ஸ், பொள்ளாச்சி ரோடு, பல்லடம் | ரூ.12,800/— |

இதற்கு ஆகும் செலவின உத்தேசத் தொகை ரூ.12,544/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :</u>**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணியை குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்த திருவாளர்கள்.அன்னை பேட்டரி வொர்க்ஸ், பல்லடம் நிறுவனம் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 5</u>**

நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவுக்கு பிளைவுட்டிலான டேபிள்கள் செய்வதற்கு மற்றும் தடுப்புகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 117 /2017/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 6</u>**

2018 -19 ஆண்டிற்கு இந்நகராட்சியில் உள்ள பொதுப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, பொது நலப்பிரிவு, மற்றும் பொறியாளர் பிரிவுகளுக்கு எழுது பொருட்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் கூட்டுறவு சங்க நிறுவனத்திடம் வாங்க தோராய செலவின தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 7</u>**

பல்லடம் நகரம், நாரணாபுரம் கிராமம், க.ச.எண் 591–1ஏ, 570–2ஏ, புல எண் 8.10 ஏக்கர் பரப்பானது பல்லடம் முழுமைத்திட்டத்தின் படி விவசாய பயன்பாட்டு பகுதியாக அமைந்துள்ளது. இப்புல எண்களில் இயங்கி வரும் கண்ணம்மாள் நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் மேனேஜிங் டிரஸ்ட்டி மேற்படி விவசாயப்பகுதியிலிருந்து கல்வி உபயோகப் பயன்பாட்டு பகுதியாக நில பயன்பாடு மாற்றம் கோரி உத்தேசங்கள் சமர்ப்பித்துள்ளனர்.

தல ஆய்வு செய்யப்பட்டது. புல எண்கள் 591/1ஏ, மற்றும் 570/2ஏ ல் அமைந்துள்ள பள்ளி வளாகத்திற்கு பல்லடம் திருப்பூர் நெடுஞ்சாலைத் துறை சாலை அணுகுபாதையாகும். மேற்படி க.ச.எண் 591–1ஏ, 570–2ஏ ல் புல எண் 8.10 ஏக்கர் பரப்பில் தற்போது பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மனுதாரர் நில பயன்பாட்டு மாற்றம் தொடர்பாக அனைத்து ஆவணங்களும் சமர்ப்பித்துள்ளார். முழுமை திட்டத்தில் விவசாய பயன்பாட்டு பகுதியாக உள்ளதனை கல்வி உபயோக பயன்பாட்டுக்கு நில பயன்பாடு மாற்றம் செய்ய நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர், கோவை அவர்கள் வழியாக அரசிற்கு அனுப்ப அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்

2.நிலபயன்பாடு மாற்றம் செய்யக்கோரும் உத்தேசத்தினை அரசிற்கு அனுப்ப அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 8</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றிய பின் அந்த இடத்தில் கிருமிநாசினி தெளிப்பதற்கு லெமன்கிராஸ் ஆயில் வாங்க ரூ. 6.00 இலட்சத்திற்கு மன்ற தீர்மான எண் 42 நாள் 28.03.2018 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 10.05.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு :

| | | | |
|---|---|---|---|
| 1 | Shri Vinayaga pharma<br>No.33, Venkataraman Street<br>Pollachi – 642 001 | Lemon cross Oil 1 Ltr | ரூ.3500/- |
| 2 | Sri Balaji Marketing<br>No9.5.1, Bazaar Street<br>Ayyampalayam<br>Dindigul Dist – 634 204 | Lemon cross Oil 1 Ltr | ரூ.2990/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல் அவர்களின் விலைப்புள்ளிகளை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் , திண்டுக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2.குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் திண்டுக்கல் நிறுவனத்திற்கு தனி அலுவலரின் அனுமதி எதிர்நோக்கி விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**பொருள் : 9**

பல்லடம் நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட பில்லூர் கூட்டுக் குடிநீர் விநியோக திட்டம் 1996 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து குடிநீர் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது. 2015 ஆம் ஆண்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நகராட்சியில் 13288 வீட்டு வரி விதிப்புகளும், 2098 வணிக பயன்பாடு வரி விதிப்புகளும் உள்ளன. தற்போது வரை 9025 வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளும், 389 வணிக குடிநீர் இணைப்புகளும் உள்ளன. மீதமுள்ள வரிவிதிப்புகள் அனைத்திற்கும் குடிநீர் இணைப்பு வழஙகுமாறு 21.03.2018 யில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேரிடை ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. எனவே இந்நகராட்சியில் மீதமுள்ள 4263 வரிவிதிப்புதாரர்கள் இணைப்பு பெற விண்ணப்பிக்காமல் உள்ளனர். இதில் 1800 வீடுகளுக்கு மட்டும் இணைப்பு இல்லை. எனவே நகராட்சி நிர்வாக ஆணையரின் அறிவுரையின் படி நகராட்சியே குடிநீர் வீட்டு இணைப்புகள், வீட்டு உரிமையாளருக்கு கொடுக்கும் வகையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி | 63.00 |

குடிநீர் திட்டம் பயன்பாட்டிற்கு வந்து பல ஆண்டுகள் ஆகியும், குடிநீர் இணைப்புகளை பொதுமக்களே முன் வந்து பெறும் பொழுது காலதாமதம் ஏற்படுகிறது. எனவே அனைவரும் பெறும் வகையில் இப்பணிகளை நகராட்சியே செய்யும் போது விரைவில் செய்து முடிக்க முடியும்.

அனைத்து வரிவிதிப்புகளுக்கும் 100% சதவீதம் இணைப்பு கொடுக்கும் போது வருவாய் அதிகரிக்கும். மேற்காண் மதிப்பீட்டுத் தொகையை வட்டியில்லா கடனாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம். வரும் வருவாயினைக் கொண்டு பெறப்படும் வட்டியில்லா கடன் தொகையை நகராட்சிக்கு

நிதிஇழப்பு (பணியாளர் ஊதியம் மற்றும் மின்சார கட்டணம்) ஏற்படா வண்ணம் திரும்ப செலுத்தலாம். எனவே இதற்கென தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதியும் மற்றும் தொகைக்கு வட்டியில்லா கடன் பெற மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது. (ந.க. எண்: 151 / 2018 / இ1)

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை வட்டியில்லா கடன் பெறவும் மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 10**

பல்லடம் நகராட்சியில் 16.05.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனவே ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.67,473 /- ஐ திருவாளர்கள். இமயம் பப்ளிகேசன் (பி) லிமிட் நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 11**

தமிழ்நாடு அரசிதழ் எண் 33 நாள் 25.01.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1 நாள் 15.03.2018 சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சியில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள் அரசு உதவி பெறும் கல்வி நிறுவங்கள் (சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிற அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்படவேண்டும் என அனைத்து நகராட்சி ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1 நாள் 28.03.2018 ன்படி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம், 2018 ன்படி நகராட்சி பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க நகராட்சி ஆணையாளர்களால் அறிவிப்பு வெளியிடப்படவேண்டும் எனவும் ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது. இதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920,பிரிவு 78(3) –ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விபரம் அறிவிப்பு செய்யப்படவும் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர் சொத்துவரி விதிப்பினை மேற்கொள்ளுவது குறித்து இறுதி செய்யப்படும் என்றும் மேல் குறிப்பிட்ட சொத்துவரி குறித்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அதன் விபரத்தை எழுத்து மூலமாக குறிப்பிட்ட நாட்களுக்குள் ஆணையாளருக்கு தெரிவிக்குமாறும் மற்றும் தமிழ்நாடு அரசிதழ் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/14ஆர்1 நாள் 23.03.2018 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் அதற்குண்டான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 12</u>**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வணிக கடைகளுக்கு **2011–2012** இரண்டாம் அரையாண்டு முதல் **2016–2017** முடியவுள்ள காலத்திற்கு சேவைவரி தொகை ரூ.**81,07,713 /–** ஐ அரசு கணக்கில் செலுத்துமாறு இணை ஆணையாளர், கலால் மற்றும் சுங்கவரிதுறை கோவை அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை அரசு கணக்கில் செலுத்துவது குறித்து திரு.கே.சங்கரநாராயணன், வழக்கறிஞர் கோவை அவர்களிடம், பல்லடம் நகராட்சி சார்பாக வழக்கு நடத்தவும், வழக்கு கட்டணத்தொகை ரூ.**15000/–** ஐ வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : தனி அலுவலர் அனுமதிக்கலாம்

தனி அலுவலர்
பல்லடம் நகராட்சி